# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Sessions Case No. 19/2025**

Prosecution Witness : **PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **கோவிந்தராஜ்** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluk** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 26th day of February 2026.

**(1ம் எதிரி வரதராஜன், 2ம் எதிரி முருகேசன் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். 1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை**

நான் சேலம் ஜான்சன்பேட்டை கிளை 1–ல் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக கடந்த 11 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.12.2019 ஆம் தேதி சேலத்தில் மாலை 04.16 மணிக்கு TN 30 N 1933 என்ற பதிவெண்ணுள்ள பேருந்தை எடுத்து சேலத்திலிருந்து மதுரைக்கு ஓட்டிச்சென்றேன். அப்போது என்னுடன் நடத்துநர் பழனிச்சாமி இருந்தார். நான் சேலத்திலிருந்து கரூர் பேருந்துநிலையத்தில் நிறுத்திவிட்டு மதுரை சென்றுகொண்டிருந்த போது பெத்தான்பேட்டை அருகில் எதிரில் வந்த பைக்கில் வந்த இரு நபர்கள் பேருந்தின் முன்பக்க கண்ணாடியை கல்லால் எரிந்தார்கள். ஆஜர் 2ம் எதிரி முருகேசன் மற்றும் ஆஜர் 1 எதிரி வரதராஜன்

ஆகிய இருவரையும் சாட்சி பெயருடன் சரியாக அடையாளம் காண்பித்தார். இருசக்கர வாகனத்தை முருகேசன் ஓட்டி வர, வரதராஜன் இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து கொண்டு பேருந்தின் முன்பக்க கண்ணாடியில் அடித்தார். அன்று வரதராஜன் அடித்த கல் இதுதான். அது அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கல்லை எரிந்ததால் கண்ணாடி முழுவதும் விரிசல் விட்டு கல் அடித்த இடத்தில் மட்டும் துளை விழுந்து கல் பேருந்திற்குள் விழுந்தது. அன்று முருகேசன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் TN 47 Q 8865 ஆகும். **அந்த வாகனம் இதுதான். அது அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாங்கள் உடனடியாக எங்கள் மேலதிகாரிக்கு தகவல் தெரிவித்துவிட்டு பின்னர் அரவக்குறிச்சி காவல்நிலையம் சென்று அங்கு நான் எழுத்துபூர்வமான ஒரு புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார்இதுதான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய கையொப்பம் புகாரில் உள்ளது. அது இதுதான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல்நிலையத்திற்கு நடத்துனர் பழனிச்சாமியும் என்னுடன் வந்திருந்தார். இது சம்மந்தமாக காவல்நிலையத்தினர் என்னைவிசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேலே முதல்விசாரணையில் கூறிய விவரங்களைத்தான் அ.சா.ஆ.1 புகாரில் கூறியுள்ளளேன். காவல்துறையினர் என்னை விசாரித்தபோதும் மேலே முதல் விசாரணையில் கூறிய விவரங்களை கூறியுள்ளேன். சம்பவம் நடைபெற்ற போது சமார் 6.20 – 6.30 மணி இருக்கும். சேலத்திலிருந்து அரவக்குறிச்சி செல்லும் 100 மீட்டருக்கு முன்பாக சம்பவம் நடந்தது. சம்பவம் நடந்த பகுதி தேசிய நெடுஞ்சாலை. போக்குவரத்து சுமாராக இருந்தது. 10, 20 இருசக்கர வாகனங்கள் போக, வர முடியும். நீங்கள் சொல்வது போல் சம்பவம்

நடந்திருந்தால் பேருந்தில் இருந்தவர்களும், மற்றவர்களும் பார்த்திருப்பார்கள் என்று சொன்னால் சரிதான். இருசக்கர வாகனத்தை நிறுத்தி விட்டு 10 வினாடிக்குள் எதிரி கல் எரிந்தார். பேருந்தை ஓட்டுநர் ஓட்டிச்செல்லும்போது முன்னால் செல்லும் வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியும். 10, 20 அடி தூரத்தில் உள்ள பதிவெண்கள் தெரியும். சம்பவம் நடந்த போது நடத்துனர் பேருந்தின் முன்படிக்கட்டு அருகில் நின்று கொண்டிருந்தார். ஆஜர் எதிரிகளை சம்பத்திற்கு முன் நான் பார்த்ததில்லை. சம்பவ தினத்தன்று தான் எதிரிகளை நான் பார்த்தேன். நான் பேருந்தை நிறுத்தி கீழே இறங்கி சென்ற போது ஆஜர்எதிரிகள் கல்லை அடித்துவிட்டு சென்றபோது நான் அவர்களை பார்த்தேன். சம்பவத்திற்கு பிறகு ஆஜர் எதிரிகளை இன்று தான் பார்க்கிறீர்கள் என்று சொன்னால் சம்பவத்திற்கு மறுநாள் காவல்துறையினர் சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள் அப்போது காலை 10.00 மணி இருக்கும். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் சம்பவ இடத்திற்கு அருகில் நின்று கொண்டிருந்தார்கள் அப்போது மீண்டும் பார்த்தேன். மறுநாள் காவல்துறையினர் சம்பவ இடத்தில் விசாரித்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் அங்கிருந்தார்கள். அவர்களை நான் அடையாளம் காண்பித்தேன். அப்போது காவல்துறையினர் விசாரிக்கும்போது தான் ஆஜர் எதிரிகள் பெயர்களை தெரிந்துகொண்டேன். சம்பவம் நடந்து பயணிகளை மாற்றுப்பேருந்தில் அனுப்பி விட்டு ஒரு மணி நேரம் கழித்து புகார் அளித்தேன். புகார் கொடுக்க பேருந்தை எடுத்துக்கொண்டு நானும் நடத்துனரும் சென்றோம். புகாரில் போட்ட கையொப்பம் மட்டும் தான் நான் காவல்துறையினரிடம் போட்டுக்கொடுத்தேன். காவல்துறையினர் நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர். அன்றைய தினமும் விசாரித்தார்கள். மறுநாள் 04.12.2019 ஆம் தேதியன்றும்

என்னை விசாரித்தார்கள். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு எப்போது என் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. புகாரில் யார் யார் சம்பவத்தை பார்த்தார்கள் என்று பெயர் குறிப்பிடவில்லை. புகார் கொடுத்து 2 மணி நேரம் கழித்து காவல்துறையினர் சம்பவ இடத்தை வந்து பார்வையிட்டுவிட்டு மறுநாள் காலையும் வந்து சம்பவ இடத்தை பார்த்தார்கள். காவல்துறையினர் உங்களிடம் வாக்குமூலம் பதிவு செய்த அன்று உங்களிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் ஞாபகமில்லை. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்துறையினர் இவர்கள் தான் என்று அடையாளம் மற்றும் பெயர் சொல்லி காண்பித்ததன் பேரில் தான் அடையாளம் காண்பித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.26 18:03:27 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

**Sessions Case No. 19/2025**

Prosecution Witness : **PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பழனிச்சாமி | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluk** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 26th day of February 2026.

**(1 ம; எதிரி வரதராஜன், 2 ம் எதிரி முருகேசன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். 1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்கள்.)**

**முதல் விசாரணை**

நான் சேலம் ஜான்சன்பேட்டை கிளை 1–ல் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துநராக 2007–ஆம் ஆண்டிலிருந்து பணிபுரிந்து வருகிறேன். சுமார் 17 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.12.2019 ஆம் தேதி சேலத்திலிருந்து மாலை 04.16 மணிக்கு TN 30 N 1933 என்ற பதிவெண்ணுள்ள பேருந்தை எடுத்து சேலத்திலிருந்து மதுரைக்கு சென்றது. அ.சா.1 கோவிந்தராஜ் ஓட்டுனர் பேருந்தை ஓட்டினார். நான் பயணிகளுக்கு டிக்கெட் கொடுத்து விட்டு பேருந்திற்குள் முன் பகுதியில் நின்றேன். கரூர் பேருந்து நிலையத்திலிருந்து மேற்சொன்ன பேருந்து மதுரையை நோக்கி சென்ற போது பெத்தான்கோட்டை பிரிவுக்கு அருகில் அரவக்குறிச்சிக்கு

பக்கத்தில் உள்ளது. அங்கு பேருந்து சென்றபோது எதிர்நோக்கி Super Splendor இருசக்கர வாகனத்தில் எதிரிகள் வந்தார்கள். ஆஜர் 1ம் எதிரி வரதராஜன் மற்றும் ஆஜர் 2ஆம் எதிரி முருகேசனை சரியாக சாட்சி பெயருடன் அடையாளம் காண்பித்தார். மேற்சொன்ன இருவரும் இருசக்கர வாகனத்தில் பேருந்திற்கு முன்னால் நிறுத்திவிட்டு கல்லால் பேருந்தின் முன்பக்க கண்ணாடியை கல்லால் வீசி உடைத்துவிட்டார்கள். ஆஜர் எதிரி வரதராஜன் கல்லால் அடித்தார். எதிரிகள் கீழிருந்த பேருந்து முன்பக்க கண்ணாடியில் கல் எரிந்தார்கள். அந்த கல் இதுதான். அது ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கல் எரிந்து கண்ணாடி உடைந்ததால் பேருந்தை நிறுத்தி இறங்கி பார்த்தபோது ஆஜர் எதிரிகள் இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள். எங்கள் கிளை மேலாளருக்கு தகவல் தெரிவித்து விட்டு நாங்கள் பேருந்தில் அரவக்குறிச்சி காவல்நிலையத்திற்கு சென்றோம். இருவரும் காவல்நிலையம் சென்று அ.சா.1 கோவிந்தராஜ் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

காவல் நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுத்த போது நீங்கள் அப்போது காவல்நிலையத்தில் கையொப்பம் எதாவது செய்தீர்களா என்றால் நான் போடவில்லை அ.சா.1 கோவிந்தராஜ் தான் புகாரில் கையொப்பம் செய்து கொடுத்தார். சம்பவம் நடந்தபோது லேசான மழையும் முகம் பார்க்கக்கூடிய அளிவில் வெளிச்சம் இருந்தது. நீங்கள் முதல் விசாரணையில் கூறிய விவரங்களைத்தான் ஆய்வாளர் விசாரணையின் போது கூறியுள்ளீர்களா என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளை சம்பவத்திற்கு முன்பாக நான் பார்த்ததில்லை. ஆஜர் எதிரிகள் கல் கொண்டு எரிந்த பிறகும், அங்கிருந்து

அவர்கள் சென்ற போதும் எதிரிகளை நான் பார்த்துள்ளேன். சம்பவம் நடந்த போது நான் பேருந்தின் முன் படிக்கட்டிற்கு அருகில் நின்று கொண்டிருந்தேன். சம்பவத்தில் பேருந்தில் முன் இருக்கையில் அமர்ந்திருந்த பயணிகள் அனைவருக்கம் சம்பவம் குறித்து தெரியும். சம்பவம் நடந்த சமயத்தில் எங்கள் பின்னால் ஒரு லாரி வந்து கொண்டிருந்தது. அந்த சமயத்தில் இருசக்கர வாகனங்கள் எதுவும் வரவில்லை. ஆஜர் எதிரிகள் மட்டும் வந்து கொண்டிருந்தார்கள். எதிரகள் இருவரும் எங்களுக்கு எதிரில் வந்து கொண்டிருந்தார்கள். எதிரி 1 நிமிடத்திற்குள் கல் கொண்டு எரிந்துவிட்டு எதிரிகள் கிளம்பி விட்டார்கள். பேருந்தின் கண்ணாடியை உடைந்த பிறகு 10 அடி தூரத்தில் நிறுத்திவிட்டு எதிரிகளை பிடிக்க நாங்கள் ஓடினோம். நீங்கள் நின்ற இடத்திலிருந்து எதிரி வந்த வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியும். நீங்கள் நின்ற இடத்திலிருந்து எதிரில் வரும் எதிரிகளின் முகம் தெரியுமா என்றால் தெரியும். வண்டியில் பின்னால் வந்த நபரும் கல் எரிந்துவிட்டு சென்றபோது அவர் முகத்தை நான் பார்த்தேன். எதிரிகளை 04.12.2019 ஆம் தேதியன்று பார்த்துள்ளேன். அதன்பிறகு தற்போது நீதிமன்றத்தில் பார்க்கிறேன். எதிரிகளை மறுநாள் காலை காவல்துறையினர் தடாக்கோவில் பேருந்து நிலையத்தில் விசாரித்துக்கொண்டிருந்த போது எதிரிகள் இருந்தார்கள் அப்போதுதான் எதிரிகள் பேரை கேட்டுத் தெரிந்து கொண்டோம். அப்போது தான் எதிரிகள் பெயர்கள் எனக்கு தெரியும். சம்பவம் நடந்த இடத்தில் காவல்துறையினர் எங்களை வந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். எதிரிக்கும் இந்த குற்ற வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்துறையினர் சொன்னதன் அடிப்படையில் எதிரிகளை அடையாளம் காண்பித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

எதிரிகள் வந்த வாகனத்தை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். நீதிமன்ற வளாகத்தில் உள்ள வாகனம் தான் அன்று எதிரிகள் வந்த வாகனம். அது ஏற்கனவே அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN
Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.26 18:03:34 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Sessions Case No. 19/2025**

Prosecution Witness : **PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **ராஜேந்திரன்** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluk** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 26th day of February 2026.

**(1 ம; எதிரி வரதராஜன், 2 ம் எதிரி முருகேசன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். 1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்கள்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெத்தாகோட்டையில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு வழக்கை பற்றி ஒன்றும் தெரியாது. காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நானும் ஆஜர் எதிரிகளும் ஒரே ஊர்க்காரர்கள் அல்ல. கடந்த 03.12.2019 ஆம் தேதி மாலை சுமார் 6.20 மணிக்கு பெத்தான்கோட்டை பிரிவில் நீங்கள்

நின்று கொண்டிருந்தீர்கள் என்றும் ஆஜர் எதிரிகள் அரசு பேருந்தின் கண்ணாடியை கல் எரிந்து உடைத்ததை நீங்கள் நேரில் பார்த்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிலிருந்து ஆஜர் எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.26 18:03:39 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Sessions Case No. 19/2025**

Prosecution Witness : **PW4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **மாரிமுத்து** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluk** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 26th day of February 2026.

**(1ம் எதிரி வரதராஜன், 2ம் எதிரி முருகேசன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். 1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்கள்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரவக்குறிச்சி அருகே வெங்கடாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரி முருகேசன் எனது உள்ளூர்க்காரர். மற்றொரு எதிரியை எனக்கு யார் என்று தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்களும் ஆஜர் எதிரி முருகேசன் ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் நீங்கள் அவருக்கு ஆதராவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள்

என்றால் சரியல்ல. கடந்த 03.12.2019 ஆம் தேதி மாலை சுமார் 6.20 மணிக்கு பெத்தான்கோட்டை பிரிவில் நீங்கள் நின்று கொண்டிருந்தீர்கள் என்றும் ஆஜர் எதிரிகள் அரசு பேருந்தின் கண்ணாடியை கல் எரிந்து உடைத்ததை நீங்கள் நேரில் பார்த்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிலிருந்து ஆஜர் எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.26 18:03:45 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 19/2025**

Prosecution Witness : **PW5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **போஜன்** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluk** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 26th day of February 2026.

**(1 ம; எதிரி வரதராஜன், 2 ம் எதிரி முருகேசன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். 1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்கள்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரவக்குறிச்சியில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியாது. சாட்சிகள் மாரிமுத்து, ராஜேந்திரன் ஆகியோர்களை எனக்கு தெரியாது. அரவக்குறிச்சியிலிருந்து பெத்தான்கோட்டைக்கு நான் வேலைக்கு சென்றுஅன்று வேலையில்லை என்று பெத்தான்கோட்டையிலிருந்து அரவக்குறிச்சிக்கு வந்த கொண்டிருந்தேன். அப்போது ஒரு பெண் காவலர் 03.12.2019 அன்று சம்பவம் ஏற்பட்டது என்றும் அதைக்குறித்து பெண்காவலர் எங்கள் முன்னிலையில் வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார்கள். அதில் நானும் ராஜாவும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளோம். என் முன்பாக எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. **பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது. எனக்கு பின்னால் ராஜா கையொப்பமிட்டுள்ளார். அது இதுதான். அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் முன்னால் எதுவும் கைப்பற்றவில்லை. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல்துறையினர் என்னை கேட்டார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

காவல்துறையினர் உங்கள் முன்பாக ஆஜர் எதிரிகள் வந்த அ.சா.பொ.2 வாகனத்தையும் அ.சா.பொ.1 கல்லையும் உங்கள் முன்பாக கைப்பற்றினார்கள் என்றும் அதற்காகத்தான் நீங்கள் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.ஆ.5 – ல் கையொப்பம் செய்தீர்கள் என்றால்சரியல்ல. தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காவல்துறையினர் என்னிடம் ஒரே கையொப்பம் பெற்றார்கள். காவல்துறையினர் படம் வரைந்தார்கள். நான் படம் வரையாத வேறொரு தாளில் தான் கையொப்பம் செய்தேன். நான் படித்ததே இல்லை. காவல்துறையினர் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

என்னால் தட்டடச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டடச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.02.26 18:03:51 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 19/2025**

Prosecution Witness : **PW6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ராஜா | **Father's Name** | : |
| **Village** | : | **Taluk** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 26th day of February 2026.

**(1 ம; எதிரி வரதராஜன், 2 ம் எதிரி முருகேசன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். 1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்கள்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரவக்குறிச்சி சந்தைப்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் கூலி வேலை செய்கிறேன். அ.சா.5 போஜன் என் மாமா. நானும் என் மாமாவும் கடந்த 04.12.2019 ஆம் தேதி அரவக்குறிச்சியிலிருந்து கரூருக்கு வேலைக்கு வந்தோம். இடையில் பாதி வழியில் வேலை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நானும் என் மாமா போஜனும் திரும்பி வந்து கொண்டிருந்தோம். பெத்தான்கோட்டை பிரிவில் ஒரு பெண் காவலர் நின்று கொண்டிருந்தார். முந்தைய நாள் மாலை பேருந்தின் கண்ணாடியை உடைத்து விட்டார்கள் என்றும் அந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து மாதிரி வரைபடம் எங்கள் முன்னிலையில் தயார் செய்தார்கள். **பார்வை மகஜரில் நாங்கள் கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது**

**ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. அது இது தான். அது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் கையெழுத்து என் மாமாவுடையது. அது ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** அங்கு இருசக்கர வாகனம் 2, 3 இருந்தது எந்த வண்டியை கைப்பற்றினார்கள் என்று தெரியாது. வழக்கு சம்மந்தமாக காவல்துறையினர் படம் வரையும்போது நான் இருந்தேன். காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் முன்பு அ.சா.பொ.1 கல், மற்றும் அ.சா.பொ.2 இருசக்கர வாகனம் ஆகியவற்றை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள் என்றும் தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். கல் எடுத்துபோட்டார்கள் நான் சாட்சியாக இருந்தேன். 2, 3 கையொப்பங்கள் போட்டிருப்பேன். எத்தனை என்று 7 வருடங்கள் ஆனதால் சரியாக ஞாபகமில்லை. நீங்கள் கையொப்பம் செய்த ஆவணங்கள் இவ்வழக்கின் எத்தகைய ஆவணங்கள் என்று கேட்டால் எனக்கு தெரியாது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.26 18:03:58 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 19/2025**

Prosecution Witness : **PW7**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **நடராஜன்** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluk** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 26th day of February 2026.

**(1ம் எதிரி வரதராஜன், 2ம் எதிரி முருகேசன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். 1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்கள்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது உதவி பொறியாளராக தர்மபுரியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.12.2019 அன்று சேலம் ஜான்சன்பேட்டை கிளை 1-ல், உதவிபொறியாளராக பணிபுரிந்த போது மாலை சுமர் 6.30 மணிக்கு TN 30 N 1933 என்ற பேருந்தின் ஓட்டுனர் அ.சா.1 கோவிந்தராஜ் சேலத்திலிருந்து மதுரை செல்லும்வழியில் உள்ள பெத்தான்கோட்டையிலிருந்து போன் செய்து 2 ஆள் தெரியாது நபர்கள் பேருந்தின் கண்ணாடியை உடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள். உடனே நான் அருகில் இருந்த காவல்நிலையத்தில் புகார் கொடுக்குமாறு தகவல் சொன்னேன். மேற்சொன்ன பேருந்தின் முன்பக்க கண்ணாடி உடைந்தது என்று கூறினார்கள். Purchase Department-ல் கண்ணாடி எவ்வளவு ரூபாய் விலைக்கு வாங்கினார்கள் என்று கேட்டு நான் கண்ணாடிக்குரிய மதிப்பு மட்டும் ரூ.18,000/- என்று சான்று வழங்கினேன்.

காவல் துறையினர் சேதமதிப்பு கேட்டதால் நான் சேதமதிப்பீடு ரூ.18000/- என்று சான்று அளித்துள்ளேன். **நான் கொடுத்து சேதமதிப்பு சான்றிதழ் இதுதான். அது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 04.12.2019 ஆம் தேதியன்று காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காவல்துறையினர் சேதமதிப்பு என்னவென்று விசாரித்தார்கள். கடிதம் வழியாக என்னை கேட்கவில்லை. வாய்மொழியாக கேட்டார்கள். நீங்கள் மேலதிகாரியிடம் அனுமதி பெற்றீர்களா என்றால் நான் Purchase manager –டம் போன் மூலம் கேட்டேன். நீங்கள் சேதமதிப்பீடு கொடுத்த அன்று பணியில் இருந்தீர்கள் என்பதற்கு காவல்துறையினர்வசம் ஆவணம் எதாவது கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. Purchase மேலாளர் எனக்கு எழுத்துப்பூர்வமாக பதில் அளிக்கவில்லை வாய்மொழியாக கூறினார். உங்களுக்கு சேத மதிப்பீடு கொடுக்க உரிமை உள்ளதா என்று சொன்னால் உதவி பொறியாளர் என்ற முறையில் உள்ளது. சேதமதிப்பீடு கொடுப்பதற்கு உங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசு ஊழியர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN
Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.26 18:04:04 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.